# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,585 — 1958 නොවැම්බර් 14 වැනි සිකුරාද — 14.11.1958

11,585 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உப பிரிவினால் கீழ்காணும் அட்டவணையிலுள்ள கட்டளைகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டவையென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கொழும்பு,
1958 ம் ஆம் நவெம்பர்மீ 11 ந் வ.

டி. பீ. ஆர். குணவர்தன,
விவசாய உணவு அமைச்சர்.

அட்டவணை

| கட்டளையிட்ட திகதி | யாரால் கட்டளை இடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்குச் சேர்மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரம் செய்யப்பட்டது |
|---|---|---|---|
| 15.10.58 | விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | உப உணவுப் பொருட்கள் | 15.10.58 ம் திகதியைக்கொண்ட 11,553 ம் இலக்கம் |
| 8.10.58 | விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | பால் உணவுகள் விபரப் பத்திரங்கள் | 9.10.58 ம் திகதியைக்கொண்ட 11,548 ம் இலக்கம் |
| 10.10.58 | புத்தளம், சிலாப மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | கருவாடு, இறால் கருவாடு | 14.10.58 ம் திகதியைக்கொண்ட 11,552 ம் இலக்கம் |

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் வி. 53 — உப உணவுப் பொருட்கள்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு வவுனியா மாவட்டத்தின் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி, பரராசசேகரம்பிள்ளை தம்பையா ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ந் திகதியைக்கொண்ட 11,508 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ந் திகதியைக்கொண்ட 50 ம் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள் முதலியவையைப் பொறுத்தமட்டில் விபரிக்கப்பட்டிருக்கும் முதலாம் அட்டவணையில் காணப்படும் விலைகளையும் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள செத்தல் மிளகாய் பற்றிய எனது விலைக் கட்டளையையும் இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையில் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருளை இரண்டாவது அட்டவணையில் முதலாம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் குறித்த விலைகளிலும் பார்க்க கூடுதலாக விற்றலாகாது ;

(3) 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ந் திகதியைக்கொண்ட 11,508 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ந் திகதி பிரசுரமான உப உணவுப் பொருட்களைக் குறிக்கும் 50 ம் இலக்க உணவு விலைக் கட்டளையின் (3) தொடக்கம் (9) ம் பந்திகள் இதனோடிருக்கும் அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள செத்தல் மிளகாயைப் பொறுத்த இக்கட்டளையுடன் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ந் திகதி, முற்பகல் 10 மணிக்கு வவுனியாவில் கையொப்பமிடப்பட்டது.

ப. தம்பையா,
பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), வவுனியா (பகுதி).

முதலாம் அட்டவணை

வவுனியா தெற்கு (தமிழ்) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச்சேர்ந்த ஆசிகுளம், வவுனியா, நொச்சிமோட்டை, நெடுங்குளமும் புதுக்குளமும் வவுனியா தெற்கு (சிங்கள) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச்சேர்ந்த மடுக்கந்தையும் ஈரப்பெரியகுளமும்

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|
| பகுதி | மொத்த அந்தர் ஒன்றுக்கு ஆகக் கூடிய மொத்த விலை | நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக் கூடிய சில்லறை விலை |
| விபரம் | ரூ. ச. | ரூ. ச. |
| 1. செத்தல் மிளகாய் .. .. | 88 27 .. | 0 90 |

இரண்டாம் அட்டவணை

| இல. | பத்தி 1<br>பகுதி | பத்தி 2<br>முதலாம் அட்டவணையில் 2 ம் பத்தியில் குறித்த விலையிலும் பார்க்க ஒரு மொத்த வியாபாரி அந்தர் ஒன்றுக்குச் சேர்த்து விற்கும் விலை (மொத்தம்)<br>ரூ. ச. | பத்தி 3<br>முதலாம் அட்டவணையில் 3 ம் பத்தியில் குறித்த விலையிலும் பார்க்க ஒரு சில்லறை வியாபாரி இருத்தல் ஒன்றுக்குச் சேர்த்து விற்கும் சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் தமிழ் பிரிவுக்குச்சேர்ந்த மருதங்குளம், மருதமடு, இராசேந்திரன்குளம் வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் சிங்கள பிரிவுக்குச் சேர்ந்த சூடுவெந்தபுலவு, மருதமடுவைத் தவிர்ந்த உலுக்குளம் | 0 25 .. | 0 1 |
| 2. | வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் தமிழ் பிரிவுக்குச் சேர்ந்த பெரியபுளியங்குளம், வாகைகட்டின ஒலுக்குளம், வாழைவைத்த குளமும், வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் சிங்களப் பிரிவில் உலுக்குளம் பகுதிக்குச்சேர்ந்த மருதமடு கிராம விதானையின் பகுதி .. | 0 50 .. | 0 1 |
| 3. | வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த நெடுங்கேணி, மாங்குளம், ஒலுமடு, கனகராயன்குளம், புளியங்குளம் .. | 0 50 .. | 0 1 |
| 4. | வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த பரந்தன், மணவாளன் பட்டமுறிப்பு, தண்டுவான், கச்சிலமடுவும் ஊஞ்சல் கட்டியும் .. .. .. .. | 0 75 .. | 0 2 |
| 5. | வவுனியா கரைதுறைப்பற்று, பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த முள்ளியவளை, தனியூற்று, முல்லைத்தீவும் வாளைமுள்ளி வாய்க்காலும் | 1 0 .. | 0 2 |
| 6. | வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த குமுளமுனை, புதுக்குடியிருப்பும் அம்பலவன்பொக்கணையும் .. | 1 25 .. | 0 2 |
| 7. | வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த கொக்கிளாயும், கொக்குத்தொடுவாயும் .. .. | 1 50 .. | 0 3 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்கலாகாது.

---

உணவு விலைக் கட்டளை இலக்கம் : ரி/15/58 — **உப உணவுப் பொருட்கள் (செத்தல் மிளகாய்).**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் உப விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு உப விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), அன்ரன் றெருத்வெல் மெக்கெய்லர் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ந் திகதி வெளிவந்த 11,529 ம் இலக்க விசேட இலங்கை வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ந் திகதி பிரசுரிக்கப்பட்ட ரி/13/58 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள், மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள் முதலியவைகளைப் பொறுத்த மட்டில் குறித்த முதலாம் அட்டவணையில் முறையே 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் காணப்படும் விலைகளை முதலாம் பத்தியில் குறிப்பிட்டுள்ள செத்தல் மிளகாய்பற்றிய எனது விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனுடனிருக்கும் முதலாம் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் சில்லறை வியாபாரி ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் சில்லறை வியாபாரி ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாக வும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட பொருளை இந்த விலைகளுக்குக் கூடுதலாக 2 ம், 3 ம், 4 ம் பத்திகளின் தலைப்பில் சொல்லப்பட்ட இடங்களில் விற்றலாகாது ;

(3) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையின் 3 பத்தியின்கீழ் திருகோணமலை நகரசபை எல்லைக்குள் என விதிக்கப்பட்ட விலைகளை இரண்டாம் அட்டவணையின் 2 ம் பத்தியில் குறிப்பிட்ட தொகைகளினால் அதிகரித்து, அவ்வதிகரித்த விலைகளையே இரண்டாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் காட்டப்பட்ட இடங்களின் முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப் பட்ட பொருளை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு, விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் காட்டப்பட்ட பொருளின் நிகர இருத்தல் ஒன்றை இவ்விலைகளுக்குக் கூடுதலாக இரண்டாம் அட்டவணையின் 1 பத்தியில் காட்டப்பட்ட இடங்களில் விற்றலாகாது ;

(4) 1958 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ந் திகதியைக்கொண்ட 11,529 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமான பத்திரிகை யில், 1958 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட உப உணவுப் பொருட்கள் சம்பந்தப்பட்ட ரி/13/58 ம் இலக்க உணவு விலைக் கட்டளையின் (4) தொடக்கம் (9) ம் பத்திகளையும் அக்கட்டளையோடு அணைக்கப்பட்டிருக்கும் இரண்டாம் அட்டவணையும் இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள செத்தல் மிளகாயைப் பொறுத்த இக்கட்டளையுடன் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ந் திகதி, பிற்பகல் 3 மணிக்கு திருகோணமலைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

அன்ரன் ஆர். மெக்கெய்ஸர்,
உப விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
திருகோணமலை மாவட்டம்.

**முதலாம் அட்டவணை**

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 |
|---|---|---|---|
| விபரம் | திருகோணமலைப் பட்டணமும் குடாக்கரை காரியாதிகாரியின் பிரிவில் ஒரு மொத்த அந்தரின் ஆகக்கூடிய மொத்த விலை | திருகோணமலை நகரசபை வட்டா ரத்தில் ஒரு நிகர இருத்தலின் ஆகக்கூடிய சில்லறை விலை | கொட்டியார் பற்றும், தம்பல காமப் பற்றும், கட்டுக்குளப் பற்றுக் காரியாதிகாரியின் பிரிவு களில் ஒரு மொத்த அந்தரின் ஆகக்கூடிய மொத்த விலை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| செத்தல் மிளகாய் .. | 88 14 .. | 0 87 .. | 89 54 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை **ஆகக்கூடிய** விலை களாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.